**விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2018**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டின் போது பெற வேண்டிய திறைசேரி உண்டியல் வட்டி ரூபா 4,859,898 தொகையானது வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது | அதனை கணக்குகளில் பதிவு செய்யும் போது இடம் பெற்றுள்ள தவறாகும். அதனை 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடந்த ஆண்டிற்கான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் போது உரிய கணக்குகளுக்கு சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் தேறப்படும் போது மீண்டும் ஒரு தடவை வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மிகையும் பெறவேண்டிய வட்டி வருமானமும் அந்த அளவால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி வங்கியினூடாக வழங்கப்பட்ட கடனுக்காக வங்கிக்கு கிடைத்த ரூபா 5, 094,919 கடன் தவணைப் பணமும் வட்டியும் நிதிக்கூற்றுக்களில் பதியப்பட்டிருக்கவில்லை | அப்பணம் 2019 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் இறுதிக் கணக்கு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு கணக்கறிக்கைகளைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வங்கிக்கு கிடைத்த நேரடிப் பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துதல் வேண்டும். |

### 1.5.2 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய கொவிசெத லொத்தர் வருமானம் ரூபா 3,542,059,053 ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்று மூலம் காட்டப்பட்டிருந்தும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் அது ரூபா 3,406,797,355 ஆக இருந்ததனால் ரூபா 135,261,698 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரி மற்றும் கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தெரிவித்து அனுப்பப்பட்ட கொவிசெத வருமான மீதியை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொதுத் திறைசேரியிடம் விசாரித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணககாய்விற்கான எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கடன்பட்டோர் | 9,603,076 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதமும் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வும் | 1999 ஆம் ஆண்டின் போது ரூபா 1,679,900 தொகை பிரதி கமநல சேவை ஆணையாளர் (ஊவ) விதை வெங்காயத்தை விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் | உரிய தரப்பினருக்கு கடிதங்களை அனுப்பி மீதிகளை உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு பொறுப்பான ஒரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வழங்குவதற்காக தெலுல்ல கமநல சேவை நிலையத்திற்கு வழங்கியுள்ள கடனாகும். இம் மீதியை உறுதிப்படுத்தி அனுப்புவது தொடர்பாக நிறுவனத்திடம் தகவல்கள் இல்லாததனால் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பப்பட்டிருக்கவில்லை.<br><br>1991 ஆம் ஆண்டின் போது ரூபா 7,923,174.95 தொகை கமத்தொழில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மீதியாகும். 2002.12.31 இல் உள்ளவாறு இம் மீதி உருவாகியுள்ள மாவட்டங்களின் பெயர் பட்டியல் மாத்திரம் உள்ளது. ஆயினும், அந்த மாவட்டத்திடம் இம் மீதிகள் தொடர்பான தகவல்கள், இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதனால் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பப்படவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கமக்காரர்களின் வைப்புக்கள் | 697,644 | விபரமான வைப்புப் பதிவேடு | இம் மீதி கமக்காரர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட மீதியாகும். வைப்பு பதிவேடு இல்லை. இது சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்கு விசேட கலந்துரையாடலுக்கு அழைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | வைப்பு பதிவேட்டினைத் தயாரித்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பங்கு கணக்கு | 591,965 | பங்குதாரர்களின் பெயர்ப் பதிவேடு | இம் மீதி விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ஒரு மீதி மாத்திரமே பங்குதாரர் பெயர்ப் பதிவேடு இல்லை. இது சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்கு ஒரு விசேட கலந்துரையாடலுக்கு அழைப்பதற்கு | பங்குதாரர்களின் பெயர்ப் பதிவேட்டினைத் தயாரித்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | முற்பணங்கள் | 28,539,239 | காலப்பகுப்பாய்வு | அம்மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வினை விரைவாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். | இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் காலப்பகுப்பாய்வினையும் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | குறுங்காலக் கடன் | 141,924,200 | காலப்பகுப்பாய்வு | அம்மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வினை விரைவாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். | - மேற்படி - |
| (ஊ) | நீண்டகாலக் கடன் | 190,977,723 | காலப்பகுப்பாய்வு | அம்மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வினை விரைவாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். | - மேற்படி - |
| (எ) | கொவிசெத நிதிய மீதி | 159,399,408 | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூல சான்று | கமக்காரர், நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாகக் காணப்பட்ட ரூபா 159,399,408 தொகையான கொவிசெத நிதியத்தின் மீதி 2002 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வருபவையாகும். இது தொடர்பான தகவல்களை பழைய கோவைகளைப் பரீட்சித்து கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதுடன் அது தொடர்பாக உங்களுக்கு விரைவாக விளக்கமளிக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6. பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்.

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துக்கள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 19,792,044 தொகையான கடன் மீதி அறவீடு செய்யப்படாது 03 ஆண்டுகளிலிருந்து 17 ஆண்டுகள் வரையான காலம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | இம் மீதிகள் அறவீடு செய்ய முடியாத நிலைமையில் காணப்பட்டதுடன் அறவிட முடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்படாததினால் கணக்குகளிலிருந்து தீர்த்து வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அங்கீகாரத்தைப் பெற்று தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதியத்தால் நியமிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மெய்மையயாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 7,241,656 தொகையான சேமிப்பு கணக்கு மீதியை அறவிட வேண்டிய கடன் மீதியாக மாற்றப்பட வேண்டும். என காட்டப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக மேலும் விடயத்தை தெளிவுபடுத்தி உறுதிப்படுத்திக்கொள்ளப்பட்டதன் பின்னர் தீர்மானம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது | இம் மீதி தொடர்பாக விடயத்தை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னர் முறையாக கணக்கு வைப்பதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 வரிப்பிரமாணங்களுடான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரி செலுத்த வேண்டிய ஒரு நிறுவனமாக இருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்த வேண்டிய வருமான வரியாக ரூபா 30,724,871 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் இது வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது வருமான வரி செலுத்துவதற்கு விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் பதிவு செய்துள்ளதுடன் இந்த ஆண்டிலிருந்து வரியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 82,914,878 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 47,097,871 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவகளில் ரூபா 35,817,007 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு அபிவிருத்திச் செலவுகள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை தோற்றுவிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் குறிப்பிடப்டப்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும் சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலன்புரிகளுக்காக நிதியம் ஆரம்பிக்கப்ட்டிருந்தும் அக்குறிக்கோள்களுக்காக போதியளவில் ஈடுபடுத்தப்படாது ரூபா 835,001,919 நிலையான வைப்புக்களிலும் ரூபா 93,042,910 திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக அிக பணத்தை ஒதுக்கீடு செய்யும் குறிக்கோளுடன் பிரதேச செயலகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் பின்தொடர் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பயிற்சிகளை வழங்கி பிரதேச மட்டத்தில் அபிவிருத்திப் பிரேரணைகளைப் பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலன்புரிகளை முன்னிட்டு போதிய அளவு நிதியம் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கொவிசெத லொத்தர் வருமானத்தில் மீளாய்வாண்டின் இறதியில் உள்ளவாறு விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய ரூபா 3,542,059,053 பணம் விவசாயிகளுக்கு வீடுகளை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டதிற்காக ஈடுபடுத்துவதற்குத் தேவையான திட்டங்கள் தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கு நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கொவிசெத லொத்தர் வருமான மீதி தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்ட வித்தியாம் சம்பந்தமாக திறைசேரி மற்றும் தேசிய லொத்தர் சபையிடம் விசாரித்து சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். அவ்வாறே 2019 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரி மற்றும் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தெரிவித்து அனுப்பப்பட்ட கொவிசெத வருமான மீதியை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கொவிசெத லொத்தர் வருமானத்தை விவசாயிகளுக்கு வீடுகள் அமைக்கும் நிகழ்ச்சிதிட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | காபனிக ரெட்லேடி பப்பாசி விவசாயத்திற்காக மொரகொல்லாகம விவசாயி ஒருவருக்கு ரூபா 600,000 பணம் பிணைகள் பெற்றுக்கொள்ளாது 2015 நவம்பர் 16 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் வெளிக்களப் பயண அறிக்கைகளில் செயல் முன்னேற்றம் இல்லை என அறிவிக்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது ரூபா 400,000 தொகையான இரண்டாவது கடன் தவணைப் பணம் 2016 மார்ச் 04 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் மாதம் வரை கடன் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நிதியத்திற்கு முடியாதிருந்தது. | இக்கடன் பணத்தை 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் செலுத்தி முடிவுறுத்த வேண்டியிருந்தது. எனினும் இன்று வரை எதுவித தவணைப் பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை .. இது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு குருனாகல் மாவட்டத்தில் மஹவ கமநல நீதிச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | கடன் தவணைப் பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| நிரந்தர பதவியணியினர்கள் இல்லாததன் காரணமாக கடனை அறவீடு செய்யும் செயல் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை. தீர்த்து வைக்கப்படாத முற்பணங்கள் காணப்படுகையில் மீண்டும் மீண்டும் முற்பணங்கள் வழங்குதல், கடனை அறவீடு செய்யும் கால தாமதம், அறவீடு செய்யப்படாத கடனை பதிவழிப்பதற்கு உள்ளாகியமை ஆகியன இடம்பெற்றதனால் நிதியத்தின் நிதி முகாமைத்துவம் திருப்தியான மட்டத்தில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந் நடவடிக்கை வெற்றிபெறச் செய்வதற்காக நிரந்தர பதவியணியினர்களை நியமிப்பதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நிறுவனம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்நிலைமையை ஏற்றுக்கொள்கிறேன். அடிக்கடி அமைச்சரவை மாற்றமடைவதன் அடிப்படையில் அதிகாரத்திலுள்ள செயற்பாடுகளை இன்று வரை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. அதிகாரச் சட்டம் அங்கீகரிகப்பட்டதன் பின்னர் நிரந்தர பதவியணியினர்களை நியமித்து முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயரித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளைத் தயாரித்து நிரந்தர பதவியணியினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 (ஆ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்டப்டிருக்கவில்லை. | செயற்திட்ட பிரேரணைகள் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டு வருவதனால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2019 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்டவாறு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிககையின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |